I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.12(L.W.10)
SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.Rajamoorthy |
| Father Name | : | |
| Occupation | : | Head Constable, Chennai |
| Taluk | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.02.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.00 p.m**

**முதல் விசாரணை–**

நான் தற்போது R6 குமரன் நகர் காவல் நிலையம். சைதாப்பேட்டை சரகம், சென்னை பெருநகர் காவலுக்கு உட்பட்ட தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். 2006 ல் வேலூர் ஆயுதப்படையில் காவலராக பணி செய்து வந்தேன். 21.03.2006 ஆயுதப்படையில் பணியில இருந்தபோது SI சீனிவாசன் அவர்கள் தலைமையில் 2 தலைமை காவலர்கள், 2 முதுநிலை காவலர்கள் என்னுடன் சேர்த்து 6 காவலர்கள் மொத்தம் 10 பேர் DSP, Vellore அவர்களிடம் அறிக்கை செய்ய சென்றோம். தலைமை காவலர் ஒருவர் பெயர் சிவாஜி மற்றொருவர் பெயர் நினைவில்லை. 6 காவலர்கள் பெயர்கள், குகன், அந்தோணிராஜ், மற்றவர்கள் பெயர் நினைவில்லை. DSP அவர்களுக்கு அறிக்கை செய்தவுடன் சாராய வேட்டை தொடர்பாக எங்களுக்கு அறிவுரை வழங்கி விரிஞ்சிபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களையும் அழைத்து கொண்டு கையிலாச மலைக்கு சாராய வேட்டைக்கு சென்றோம். மாலை 03.30 மணிக்கு கிளம்பி 04.45 மணிக்கு DSP அவர்களுக்கு அறிக்கை செய்தோம். அதிலிருந்து அரை மணி நேரத்தில் கிளம்பி விட்டோம். 16.00 மணிக்கு என்று சொல்லிவிட்டு அடுத்த நொடியே அவர் இல்லை என்றும் நினைவுப்படுத்தி 18.00 மணிக்கு கையிலாய

மலைக்கு சென்று மலையில் ஏறி கிட்ட போனபிறகு எங்களை பார்த்ததும் 4 பேர் சாராயம் குடிக்க வந்தவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

மணி(எ) சின்னபையன் என்பவர் நாட்டு துப்பாக்கி எடுத்து முன்னாடி போன SI சீனிவாசனை சுட்டார். அதில் பயந்து அவர் கீழே விழுந்துவிட்டார். அதன் பிறகு வெங்கடேசன் என்பவர் அந்தோணிராஜ் என்பவரை கத்தியால் வலது கை, இடது கை, மார்பு பகுதியில் கத்தியால் வெட்டினார். அப்போது நானும், காவலர் குகனும் வெங்கடேசனை மடக்கி பிடித்து DSP அவர்களிடம் ஒப்படைத்தோம்.

அதன் பிறகு SI சீனிவாசனுக்கும் அடிப்பட்டு இருந்தது. அவரையும் அந்தோணிராஜ் ஆகியோர்களை அழைத்து வந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். உடன் மணி (எ) சின்னபையனையும் சிகிச்சைக்காக சேர்த்தோம். அதன் பிறகு DCRB DSP அவர்கள் என்னை விசாரித்தார். நீதிமன்றத்தில் மணி (எ) சின்னபையன் இருக்கிறார், அவர் மெருன் கலர் சட்டை போட்டுள்ளார். வெள்ளை கலர் சட்டை போட்டுள்ளது சடையன்(2 வது எதிரி) என்று சொல்லிவிட்டு பின்னர் கூறினார் (வெள்ளை கலர் சட்டை போட்டுள்ளது அடையாளம் தெரியவில்லை( 4 வது எதிரி).

நீதிமன்றத்தில் உள்ள பொருட்களை பார்த்து யார் யார் என்ன வைத்திருந்தார்கள் என்று சொல்லுங்கள் என்றால் மணி என்ற சின்னபையன் ஒரு துப்பாக்கி வைத்திருந்தார். வெங்கடேசன் கத்தி வைத்திருந்தார். அதன் பிறகு என்ன என்று எனக்கு தெரியவில்லை. அந்த கத்தியை அடையாளம் காட்ட முடியுமா என்றால் அந்த கத்தி தான் நீதிமன்றத்தில் உள்ளது. அந்த கத்தி சா.பொ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மணி என்ற சின்னபையன் வைத்திருந்த துப்பாக்கி எது என்றால் பறிமுதல் 2 துப்பாக்கிகளில் பெரிய துப்பாக்கியை மணி வைத்திருந்தார். அது இங்கிறதா என்றால் இருக்கிறது. அந்த துப்பாக்கி சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது தான்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 23.03.2006 ல் நடந்தது.

ரெய்டுக்கு யார் என்னை வர சொன்னார்கள் என்றால் DSP. Vellore அவர்கள் RSI சீனிவாசன் என்பவருக்கு சாராய வேட்டைக்கு வர சொல்லி தகவல் சொன்னார். எனக்கு எழுத்து மூலமாக எதாவது தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை மைக் மூலமாக தான் தகவல் கொடுத்தார்கள். எத்தனை மணிக்கு தகவல் சொன்னார்கள் என்றால் மாலை 04.00 மணிக்கு தகவல் சொன்னார்கள். நான் 04.00 மணிக்கு எங்கு சென்றேன் என்றால் வேலூர் DSP அலுவலகம் சென்றோம். தகவல் சொல்லும் போது நான் எங்கிருந்தேன் என்றால் நாங்கள் அதிரடி படை என்பதால் வண்டியிலேயே இருந்தோம். என்னுடன் வந்த காவலர்கள் அனைவரும் என்னடனே இருந்தார்களா என்றால் ஆம் வாகனத்தில் தான் இருந்தோம். DSP அலுவலகம் வேலூரில் உள்ளது. ஆயுதப்படை வண்டி DSP அலுவலகத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால் 18 வருடம் ஆனதால் மறந்துவிட்டேன்.

எவ்வளவு நேரத்தில் DSP அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் அரை மணி நேரத்திலிருந்து முக்கா மணி நேரத்தில் சென்று விட்டோம். DSP அலுவலகத்தில் 15 நிமிடங்கள் தான் இருந்தோம். அதன் பிறகு கிளம்பி சிவநாதபுரம் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு சுமார் 15 முதல் அரை மணி நேரம் இருந்தோம். அங்கு DSP மற்றும் காவலர்கள் அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம். அங்கிருந்து 18.00 மணிக்கு கிளம்பினோம். அங்கிருந்து கையிலாய மலை எவ்வளவு தூரம் என்றால் தெரியவில்லை, மறந்துவிட்டேன்.

எவ்வளவு நேரம் வாகனத்தில் சென்றோம் என்றால் அரை மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்குள் கையிலாய மலைக்கு அனைவரும் சென்று விட்டோம். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் DSP அவருடைய வாகனத்திலும் காவலர்கள் 10 பேரும் Eicher வண்டியிலும் சென்றோம். அந்த வண்டியின் எண். TN 23 G 0394. நாங்கள் அனைவரும் சீருடையில் தான் இருந்தோம். துப்பாக்கிகள் எடுத்து சென்றோமா என்றால் DSP வைத்திருந்தார். மற்ற நபர்கள் துப்பாக்கிகள் எடுத்து செல்லவில்லை.

வாகனத்தை மலை அடிவாரத்தில் நிறுத்திவிட்டு நாங்கள் நடந்து போனோம். அந்த பகுதியில் வீடுகள் இருந்தது. வண்டியை நிறுத்திவிட்டு நாங்கள் எவ்வளவு தூரம் மலை ஏறினோம் என்றால் 1 கிலோ மீட்டர் சென்றோம்.எவ்வளவு நேரம் நடந்து போனேன் என்றால் சுமார் அரை மணியிலிருந்து முக்கா மணி நேரத்திற்குள் நடந்து சென்றோம். காவலர்கள் சீருடையில் வருவதை பார்த்து அங்கிருந்தவர்கள் அங்கிருந்து அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றால் சரிதான்.

துப்பாக்கிகள் மற்றும் கத்தி ஆகியவற்றை என்னுடன் வந்தவர்கள் தான் எடுத்து வந்து DSP யிடம் கொடுத்தார்கள். அந்த துப்பாக்கி நாட்டு துப்பாக்கி. அது யாருடையது என்று அடையாளம் தெரியாது என்றால் சரிதான். அதை தவிர்த்து எந்த பொருளும் அங்கிருந்து எடுத்துவரவில்லை என்றால் சரியல்ல, 2 லாரி டியுப்பில் 100 லிட்டர் சாராயம் மற்றும் ரூ.150 பணம் அங்கிருந்து எடுத்து வரப்பட்டது. அது ரூ.10 தாளா ரூ.20 தாளா என்றால் தெரியாது. மறந்துவிட்டேன்.

சாராயத்தை அங்கேயே அழித்துவிட்டார்களா தூக்கி கொண்டு வந்தோமா என்றால் நினைவில்லை. கையிலாய மலையில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் முக்கா மணி நேரத்திலிருந்து 1 மணி நேரம் வரை இருந்தோம்.

அங்கிருந்து எப்போது கிளம்பினோம் என்றால் நினைவில்லை. அதன் பிறகு எல்லாரும் அரசு அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் நினைவில்லை. அதன் பிறகு அந்தோணிராஜ் என்பவருடன் மருத்துவமனையில் இருந்துவிட்டேன். எத்தனை பேர் மருத்துவமனையில் இருந்தோம் என்றால் 3 பேர் இருந்தோம். யார் யார் என்றால் பெயர் நினைவில்லை. மற்றவர்கள் ஆயுதப்படைக்கு சென்றுவிட்டார்கள்.

என்னை யார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் DCRB DSP விசாரனை செய்தார். அவருடைய அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார். விசாரித்து வாக்குமூலத்தை கைப்பட பதிவு செய்து கொண்டார். 2

பக்கம் எழுதி கொண்டார். அந்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் எங்கள் கையெழுத்து அதில் வராது.

நாங்கள் DSP கேட்டதால் புள்ளி விவரத்திற்காக சாராய வேட்டைக்காக சென்று அங்கு மலை பகுதயில் ஆடு மாடு மேய்த்து கொண்டிருந்த மலைவாழ் மக்களை பார்த்து DSP தெரியாமல் சுட்டுவிட்டார் என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க எங்கள் DSP கேட்டு கொண்டதன் பேரில் அப்பாவிகளான எதிரிகள் சாராயம் விற்று கொண்டிருந்தாகவும் துப்பாக்கியால் சுட்டதாகவும் எங்கள் DSP கேட்டு கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. துப்பாக்கிகள் மற்றும் கத்தி அனைத்தும் எங்கள் DSP ஆல் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வழக்கு சம்பவத்திற்கும் 4 வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி அந்த இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் இன்று நீதிமன்றத்தில் எந்த எதிரி ஆஜராகி உள்ளார்கள் என்ற விவரங்கள் சொல்ல முடியவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் 4 வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்த வழக்கில் 4 வது எதிரி புள்ளி விவரத்திற்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 4 வது எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். நான் 4 வது எதிரி ஓடிவிட்டார் என்று நான் வழக்கிற்காக தற்போது சமயோஜிதனமாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக நான் கொடுத்ததாக சொல்லப்படும் 161 வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

1 மற்றும் 2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை மீண்டும் விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**1 மற்றும் 2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ஆஜர் எதிரிகளை முதன் முதலாக தற்போதுதான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் இல்லை, முன்னாடியே புடிக்கும்போது பார்த்துள்ளேன். அவ்வாறு நான் பார்க்கவில்லை என்றாலும் தற்போது நீதிமன்றத்திற்கு வரும் காவலர் சொல்லி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள காவலர் சொல்லி அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 12.45 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.02.12 18:03:49 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்